# சென்னை டாக்டர். அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி
# புதுப்பாக்கம் - 603103

## வழக்குவாத போட்டி கல்லூரி தேர்வு சுற்றுகள் (2022 - 2023)

## வழக்கின் பொருண்மைகள்

டாக்டர் கோபிகா என்பவர் சென்னையில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையான ராம் மனோகர் காந்தி மற்றும் உயர் கல்வி நிறுவனத்தில் பெண்ணோயியல் துறையின் (Department of Gynaecology) தலைவராக பணியாற்றி வருகிறார். மேற்படி மருத்துவமனையில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு அனைத்து சிகிச்சைகளும் இலவசமாகவும் மற்றும் கட்டணம் செலுத்தக்கூடிய வகையில் உள்ள வருமான வரம்பில் உள்ள நபர்களுக்கு, சிகிச்சைகள் தகுந்த கட்டணங்களும் வசூலிக்கப்படுகிறது. சஹாரா ரியாலிட்டி என்ற நிறுவனத்தில் மாதம் ரூ.5000 ஊதியம் பெறும் மாயா எனும் திருமணமாகாத பெண் கடந்த 22.06.2022 அன்று அல்ட்ராசவுண்ட் பரிசோதனைக்காக டாக்டர் கோபிகாவை சந்தித்தார். மேற்படி பரிசோதனையை மேற்கொண்ட டாக்டர் கோபிகா, அந்த அறிக்கையின் அடிப்படையில் மாயா அவர்கள் நார்திசுக்கட்டி நோயால் (fibroids) பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். மேற்படி அல்ட்ராசவுண்ட் முறையின் படி நோயினை ஓரளவு வரை தான் கண்டுபிடிக்கமுடியும் என்றும் முழுநோயின் தன்மையை கண்டறிய லேப்ரோஸ்கோப்பி பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும் என்றும் டாக்டர் கோபிகா அவர்கள் மாயாவிடம் தெரிவித்தார். அடுத்த நாள் மாயா, டாக்டர் கோபிகாவிடம் லேப்ரோஸ்கோப்பி சிகிச்சைக்காக சென்றார். டாக்டர் கோபிகாவால் பராமரிக்கப்பட்டு வரும் சேர்க்கை அட்டையில், மாயாவை நோய் அறிதல் மற்றும் லேப்ரோஸ்கோப்பி அறுவை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார் என்று எழுதப்பட்டிருந்தது. மேற்படி அட்டையில் எண்ட்ரோமெட்ரியோஸிஸ் பற்றி எதுவும் எழுதப்படவில்லை. ஹிஸ்ட்ரோஸ்கோபி, நோய் அறிதல் லேபராஸ்கோப்பி மற்றும் அறுவை சிகச்சை லேபராஸ்கோப்பி ஆகியவற்றிற்காக மாயா அனுமதிக்கப்பட்டார் என்று டாக்டர் கோபிகாவால் சொல்லப்பட்டு அதனை பிரதிவாதியின் தரப்பில் இருந்த ஓர் உதவியாளர் பதிவு செய்துள்ளார். (குறிப்பு–ஹிஸ்ட்ரோஸ்கோப்பி என்பது கருப்பையை சிறப்பு எண்டோஸ்கோப்பி மூலம் ஆய்வு செய்வதாகும். மேலும் லேப்ராஸ்கோப்பி என்பது சிறப்பு

எண்டோஸ்கோப்பி மூலம் வயிறு பகுதியை ஆய்வு செய்வதாகும்). மேற்படி (1) சேர்க்கை மற்றும் வெளியேற்ற அட்டை (2) மருத்துவமனை அனுமதி மற்றும் சிகிச்சைக்கான ஒப்புதல் படிவம் மற்றும் (3) அறுவை சிகிச்சைக்கான ஒப்புதல் படிவம் ஆகியவற்றில் மாயா அவர்களின் கையொப்பம் பெறப்பட்டு மேற்படி சிகிச்சைக்கான முறைகள் அனைத்தும் மாயாவிடம் டாக்டர் கோபிகாவின் உதவியாளரால் நோய் அறிதல் மற்றும் அறுவை சிகிச்சை லேபராஸ்கோப்பி மற்றும் லேபரோடோமி தேவைப்படலாம் என்று தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. அதன்பின்பு அங்கு ஏதும் உரையாடல் நடைபெறவில்லை. மாயா அவர்கள் சாதாரண மயக்கநிலைக்கு மருந்து அளிக்கப்பட்டு லேப்ராஸ்கோப்பி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். மாயா அவர்களுக்கு மயக்கமருந்து அளித்து சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கும் போது, அறுவை சிகிச்சை அரங்கை விட்டு அவசரமாக வெளியே ஓடிவந்த டாக்டர் கோபிகா அவர்கள் மாயாவின் தாயாரிடம், மாயாவிற்கு அதிக இரத்தப்போக்கு ஏற்படத் தொடங்கி உள்ளதாகவும், அவரது உயிரைக்காப்பாற்ற விரிவான அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். மாயாவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக நம்பிய மாயாவின் தாயார் மாயாவின் உயிரை காப்பாற்றும் நோக்கில் சில காகிதங்களில் கையொப்பமிட்டார். மேலும் மாயா தனது சுயநினைவை மீண்டும் பெறும் வரை காத்திருக்காமல், அவருக்கு தீவிர அறுவை சிகிச்சை (அதாவது, வயிற்று கருப்பை நீக்கம் மற்றும் இருதரப்பு சல்பிங்கோ-ஓபெரெக்டமி) மூலம் அவரது இனப்பெருக்க உறுப்புகள் அகற்றப்பட்டன.

நினைவு தெளிந்த பின்பு மாயா அவர்களுக்கு தனது இனப்பெருக்க உறுப்புகள் அகற்றப்பட்டதை எதிர்த்து டாக்டர் கோபிகாவிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு அவர் அவரது உதவியாளரால் நிரப்பப்பட்டு மாயாவால் கையொப்பமிடப்பட்ட ஒப்புதல் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள லேபராடோமி என்ற சொல் கருப்பை நீக்கம் மற்றும் இருதரப்பு சல்பிங்கோ-ஓபெரெக்டமிக்கு சமம் அல்லது அதற்கு சமம் என்று பதில் அளித்தார். அறுவை சிகிச்சை மூலம் தனது இனப்பெருக்க உறுப்புகள் அகற்ற படவேண்டிய நிலையில் இருந்தால் அதனை ஏற்காமல் வேறு ஆக்கப்பூர்வமான மாற்று சிகிச்சையை தேர்ந்து எடுத்து இருப்பேன் என்று மாயா அவர்கள் டாக்டர்

கோபிகாவிடம் பதில் அளித்தார். தன்னுடைய அனுமதியின்றி இனப்பெருக்க உறுப்புகளை அகற்றியதற்காகவும் கவனக்குறைவாக செயல்பட்டதற்காகவும் டாக்டர் கோபிகா மீது மாயா அவர்கள் காவல் துறையில் புகார் அளித்தார். மேலும் 25.06.2022 அன்று மாயா அவர்கள் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில், டாக்டர் கோபிகா அவர்களின் கவனக்குறைவான சிகிச்சை அளித்ததற்காகவும் தனது இனப்பெருக்க உறுப்புகளை இழந்ததற்காகவும் ரூ.10 கோடி இழப்பீடு கோரி புகார் அளித்தார். மேலும் தான் ஒரு தாய் ஆகும் வாய்ப்பை இழந்ததாகவும், திருமண வாழ்க்கை என்பது இல்லாமால் போய்விட்டாதாகவும், முக்கிய இனப்பெருக்க உறுப்பினை இழந்ததால் மீளமுடியாத நிரந்தர சேதம், உடல் காயம், வலி, மன அழுத்தம் மற்றும் அதிர்ச்சி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டதுடன் உடல் ஆரோக்கிய குறைவு ஏற்பட்டு அதிக சுகாதார ஆபத்துக்களை சந்திக்க நேரிடும் என்று புகாரில் கூறியுள்ளார். இந்த புகார் 23.09.2022 அன்று ஆணையத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே தற்போதைய மேல்முறையீட்டு மனு மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வழக்குவாத போட்டிக்கு கல்லூரி சார்பாக போட்டியிட மாணவ மாணவியரை தேர்ந்தெடுக்கும் விதிமுறைகள்

**மொழி**

கல்லூரி சார்பாக போட்டியிட மாணவ மாணவியரை தேர்ந்தெடுக்கும் வழக்கு வாத போட்டியானது தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நடைபெறும்.

**தகுதி**

போட்டியில் பங்குபெறும் அனைத்து மாணவ மாணவியரும் தங்களுடைய கல்லூரியில் உள்ள வழக்குவாத போட்டி அங்கத்தினர்கள் சங்கத்தின் உறுப்பினர் ஆவார்கள்.

**வாதுரையானது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்**

- அட்டைப்பக்கம் – வழக்குவாத போட்டி குழுவால் கொடுக்கப்பட்ட பதிவு எண்
- அட்டவணை உள்ளடக்கம்
- நீதிமொழி அட்டவணை
- வழக்கின் பொருண்மைகள்
- நீதிமன்ற ஆள்வரம்பு
- சொற்றொடர் சுருக்கப்பட்டியல்
- வழக்கெழுவினாக்கள்
- விரிவான வாதுரை அடிக்குறிப்புடன்
- மேம்பட்ட வாதுரை மற்றும்
- இறைஞ்சுதல்

**பக்க எண்ணிக்கை**

வழக்கின் பொருண்மைகள், நீதிமன்ற ஆள்வரம்பு, சொற்றொடர் சுருக்கப்பட்டியல், வழக்கெழுவினாக்கள், விரிவான வாதுரை அடிக்குறிப்புடன் மேம்பட்ட வாதுரை மற்றும் இறைஞ்சுதல் ஆகிய அனைத்தும் சேர்ந்து 25 பக்கங்கள் வரை இருத்தல் வேண்டும்.

**மேற்கோள் படிவும்**

ப்ளூ புத்தகம் 20வது பதிப்பின் அடிப்படையில் மேற்கோள்கள் இடம் பெற்றிருக்கவேண்டும். வாதுரையானது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ வேறு இடத்தில் இருந்து பார்த்து எழுத்துத் திருட்டு ஆக இருந்தால் அந்த பங்கேற்பாளரை தகுதி நீக்கம் செய்ய வழக்கு வாத போட்டிக்குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு.

**வாதுரையானது கீழ்க்கண்டவாறு மதிப்பெண் வழங்கப்படும்**

கீழ்க்கண்ட தீர்மானிக்கப்பட்ட முறையில் வாதுரையானது 100 மதிப்பெண்களுக்கு தீர்வு வழங்கப்படும்

| நெறிமுறை | | மதிப்பெண்கள் |
|---|---|---|
| தெளிவான பொருண்மை | - | 20 |
| ஆராய்ச்சி திறன் மற்றும் உபயோகம் | - | 20 |
| முன்தீர்ப்பு நெறிகள்/நீதிமொழிகள் உபயோகம் | - | 20 |
| வாதுரையின் வெளிப்படை எண்ணம் | - | 20 |
| இலக்கணம் மற்றும் நடைமுறை | - | 10 |
| உண்மைத் தன்மை | - | 10 |

**வாதத்திறமையானது கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கபடும்**

அனைத்து சுற்றுகளிலும் வாதுரையாளரின் திறமையானது கீழ்க்கண்டவாறு தீர்மானித்து மதிப்பெண் வழங்கப்படும்

| நெறிமுறை | | மதிப்பெண்கள் |
|---|---|---|
| பொருண்மை பற்றிய அறிவு | - | 10 |
| சட்டப்பகுப்பாய்வு திறன் | - | 20 |
| வாதம் செய்யும் திறன் | - | 20 |
| வழக்கினை தெளிவாக வெளிப்படுத்தும் திறன் | - | 20 |
| நீதிமன்ற மாண்பு | - | 10 |
| கேள்விகளுக்கு விடையளிக்கும் திறன் | - | 10 |
| நடை, உடை மற்றும் முன்வைப்பு திறன் | - | 10 |

**முக்கிய தேதிகள்**

| | | |
|---|---|---|
| பதிவு செய்ய கடைசி நாள் | - | 28.09.2022 |
| பதிவு எண் ஒதுக்கீடு | - | 29.09.2022 |
| வாதுரை சமர்பிக்கும் நாள் | - | 05.10.2022 |
| வாய்மொழி சுற்று | - | 07.10.2022 |